**EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL**

**பாடம்-2 –FA-3** **STD : III**

**தூக்கணாங்குருவியும் ஒட்டகச்சிவிங்கியும்**

**VI. சரி (√) தவறு (X) எனக் குறிப்பிடுக.**

1. தூக்கணாங்குருவி வீட்டினுள் கூடு கட்டியது (தவறு)
2. ஒட்டகச்சிவிங்கியின் காதைக் கடித்தது தவளை (தவறு)
3. மரக்கிளையை உலுக்கியது ஒட்டகச்சிவிங்கி (சரி)
4. ஒட்டகச்சிவிங்கி குளத்தில் விழுந்தது (சரி)

**VII. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**Pg. No. 11**

**VIII. குறுவினா.**

1. தூக்கணாங்குருவிக்கு உதவி செய்தவர்கள் யார் யார்?
விடை : தூக்கணாங்குருவிக்கு உதவி செய்தவர்கள் தேனீ, தவளை
2. தேனீ எதன் காதருகே சென்று கடித்தது?
விடை : தேனீ ஒட்டகச்சிவிங்கியின் காதருகே சென்று கடித்தது.
3. தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் ஏன் கத்தின?
விடை : ஒட்டகச்சிவிங்கி மரக்கிளையை அசைத்ததால் தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் கத்தின.

**IX. சிறுவினா.**

1. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதிக்கருத்து யாது?
விடை :
- மற்றவர்களுக்கு தீங்கு தராத செயல்களை செய்தல்.
- தன்வினை தன்னைச் சுடும்.

**பாடம்-7**

**தமிழ் மொழியின் பெருமை**

**VI. சரி (√) தவறு (X) எனக் குறிப்பிடுக.**

(Book Pg.No. 45)

**VII. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**Pg. No. 46**

**VIII. குறுவினா.**

1. தமிழ் மொழியின் பெருமைகளுள் இரண்டினை எழுதுக?
விடை : தமிழ் மொழியின் பெருமைகளுள் இரண்டு இலக்கணம், இலக்கியம்
2. கீழடி அகழாய்வில் கண்டுப்பிடிக்கப்பட்ட பொருள்கள் யாவை?
விடை : கீழடி அகழாய்வில் கண்டுப்பிடிக்கப்பட்ட பொருள்கள் மண்பாண்டங்கள், ஆடை, அணிகலன்கள்
3. தமிழரின் பெருமையைக் கணியன் பூங்குன்றனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
விடை : தமிழரின் பெருமையைக் கணியன் பூங்குன்றனாா "யாதும் ஊரே, யாவரும் கேளிர்".

**IX. சிறுவினா.**

1. தமிழ்மொழி செம்மொழி என்று ஏன் அழைக்கப்படுகிறது?
விடை: தமிழ்மொழியானது பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால் செம்மொழி என அழைக்கப்படுகிறது.

**பாடம்-8- SA-3**

**அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள்**

**VI. சரி (√) தவறு(X) எனக் குறிப்பிடுக.**

1. விமானம் பறப்பது பற்றிய செய்தியை தொலைக்காட்சி வாயிலாக இளவரசி அறிந்து கொண்டாள் (சரி)
2. மழை பெய்யும் போது இளவரசியும், பூங்குழலியும் மரத்தின் அடியில் நின்றனர் (தவறு)
3. விமானம் வானில் பறக்கும் (சரி)
4. இளவரசியும், பூங்குழலியும் தொலைக்காட்சியில் விளையாட்டு நிகழ்ச்சியைப் பார்த்தனர் (தவறு)

**VII. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**Pg. No. 52**

**VIII. குறுவினா.**

1. பூங்குழலியும், இளவரசியும், வானத்தில் எதைக் கண்டனர்?
விடை : பூங்குழலியும், இளவரசியும், வானத்தில விமானத்தைக் கண்டனர்.
2. வானில் பறக்கும் விமானம் எதனால் பாதிக்கப்படாது என்று இளவரசி கூறினாள்?
விடை : வானில் பறக்கும் விமானம் புயல், இடி, மழை, மேக மூட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்படாது என்று இளவரசி கூறினாள் .
3. இடிதாக்கியின் போது எதன் அடியில் நின்றால் ஆபத்து ஏற்படும்?
விடை : இடிதாக்கியின் போது மரத்தடியில் நின்றால் ஆபத்து ஏற்படும்

**IX. சிறுவினா.**

1. இளவரசி தொலைக்காட்சியில் என்னவெல்லாம் பார்த்ததாகக் கூறினாள்?
விடை :
- பொம்மைப் படங்கள்
- விளையாட்டு நிகழ்ச்சிகள்
- செய்திகள்

ஆகியவற்றை இளவரசி தொலைக்காட்சியில் பார்த்தாள்

**இலக்கணம்**

**உயர்திணையும், அஃறிணையும் (FA-3, SA-3)**

1. திணை என்றால் என்ன?
விடை : திணை என்பதன் பொருள் ஒழுக்கம்.
2. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
விடை : திணை இரண்டு வகைப்படும்.
- உயர்திணை
- அஃறிணை

3. உயர்திணை என்றால் என்ன? எ.கா தருக?
விடை : உயர்திணை என்பது மனிதர்களைக் குறிக்கும். (எ.கா) அரசன், ஆசிரியர்
4. அஃறிணை என்றால் என்ன? எ.கா தருக?
விடை: அஃறிணை என்பது விலங்குகளையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கின்றது.
(எ.கா) கல், மாடு

## FA-3

### கட்டுரை-மரம்

1. மரம் நிழல் தரும்.
2. மரங்களில் பல வகைகள் உண்டு.
3. மரம் மழை பெய்வதற்கு உதவி செய்கிறது.
4. மரம் மண் அரிப்பை தடுக்கிறது.
5. மரத்திலிருந்து கிடைக்கும் பூ, காய், கனி அனைத்தும் நாம் பயன்படுத்துகிறோம்.

## SA-3 – கடிதம்

**உன் வீட்டில் புதுமனை புகுவிழா நடக்க இருப்பதால் வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.**

தேதி- XXXX
இடம் : சென்னை-99

அனுப்புநர்

___________,
மூன்றாம் வகுப்பு" " பிரிவு,
எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
கொளத்தூர்,
சென்னை-99.

பெறுநர்

வகுப்பாசிரியை அவர்கள்,
மூன்றாம் வகுப்பு" " பிரிவு,
எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
கொளத்தூர்,
சென்னை-99.

வகுப்பாசிரியை அவர்களுக்கு,

வணக்கம், நாங்கள் புதுவீடு கட்டியிருப்பதால் "புதுமனை புகுவிழா" நடக்க இருப்பதால் எனக்கு இரண்டு நாட்கள் ( ) மட்டும் விடுப்புத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் கீழ்படிந்துள்ள
மாணவன்/ மாணவி
XXXX